# 3. பொருள் இலக்கணம்

CPA College

## அகப்பொருள்

பழந்தமிழ் இலக்கியத்தை அகம், புறம் என இரு பிரிவுகளாகப் பகுத்தனர். ஒத்த தலைமகனும் தலைமகளும் உள்ளம் ஒன்றுகூடி வாழும் வாழ்க்கையை அகம் என்று கூறுவர்.

அகப்பொருள் கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை, பெருந்திணை என ஏழு வகைப்படும்.

கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம். தலைவன், தலைவி ஆகிய இருவரில் ஒருவர் மட்டும் மற்றொருவரைக் காதலிப்பது. கை என்றால் சிறுமை எனவும் கிளை என்றால் உறவு எனவும் பொருள்படும்.

ஐந்திணை என்பது இருமருங்கும் ஒத்த காதலாகும். அதாவது அன்புடைய காமம்.

பெருந்திணை என்பது ஒவ்வாத காதலாகும். அதாவது பொருந்தாக் காமம்.

இவற்றுள் ஐந்திணைக்குரிய பொருள்கள் முதல், கரு, உரி என மூன்று வகைப்படும். கைக்கிளை, பெருந்திணைகளுக்கு உரிய பொருள்கள் தனியே இல்லை. ஐந்திணைகளுக்கு உரியவை இவைகளுக்கும் பொருந்தும்.

## முதற்பொருள் :

நிலமும் பொழுதும் முதற்பொருளாகும்.

நிலம் : நிலம் ஐந்து வகைப்படும். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும்.

குறிஞ்சி : மலையும் மலை சார்ந்த இடமும்

முல்லை : காடும் காடு சார்ந்த இடமும்

மருதம் : வயலும்வயல் சார்ந்த இடமும்

நெய்தல் : கடலும் கடல் சார்ந்த இடமும்

பாலை : மணலும் மணல் சார்ந்த இடமும் (சுரமும் சுரம் சார்ந்த இடமும்)

சுரம் என்பது வெப்பத்தின் கொடுமையால் நிலைமாறிய பொட்டல் காடு.

பொழுது : 1. பெரும்பொழுது

2. சிறுபொழுது என இருவகைப்படும்.

### பெரும்பொழுது

பெரும்பொழுது என்பது ஓர் ஆண்டிற்குரிய பருவகாலங்கள். இவை ஆறு வகைப்படும்.

| | காலம் | திங்கள் (மாதம்) |
|---|---|---|
| 1. | கார் | ஆவணி, புரட்டாசி |
| 2. | கூதிர் | ஐப்பசி, கார்த்திகை |
| 3. | முன்பனி | மார்கழி, தை |
| 4. | பின்பனி | மாசி, பங்குனி |
| 5. | இளவேனில் | சித்திரை, வைகாசி |
| 6. | முதுவேனில் | ஆனி, ஆடி |

### சிறுபொழுது

சிறு பொழுது என்பது ஒரு நாளுக்குரிய சிறிய காலங்களாகும்.

| | காலம் | அளவு |
|---|---|---|
| 1. | மாலை | 6-10 (மாலை - இரவு) |
| 2. | யாமம் | 10-2 (இரவு) |
| 3. | வைகறை | 2-6 (அதிகாலை) |
| 4. | காலை | 6-10 (காலை) |
| 5. | நண்பகல் | 10-2 (மதியம்) |
| 6. | எற்பாடு | 2-6 (மாலை) |

எற்பாடு = எல் + பாடு

எல் = கதிரவன் பாடு = படுகின்ற (மறைகின்ற) காலம்.

CPA College

## நிலத்திற்குரிய பெரும்பொழுது சிறுபொழுது :

| நிலம் | பெரும்பொழுது | சிறுபொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | கூதிர், முன்பனி | யாமம் |
| முல்லை | கார் | மாலை |
| மருதம் | கார், கூதிர், முன்பனி பின்பனி, இளவேனில் முதுவேனில் | வைகறை காலை |
| நெய்தல் | கார், கூதிர், முன்பனி பின்பனி, இளவேனில் முதுவேனில் | எற்பாடு |
| பாலை | இளவேனில், முதுவேனில் பின்பனி | நண்பகல் |

CRA College
Double Tap to Edit

### கருப்பொருள் :

முதற்பொருள்களாகிய நிலத்தினும் பொழுதினும் தோன்றுவன கருப்பொருள்கள். அகத்திணைக்குக் கருவாய் அமைவன கருப்பொருள்களாகும்.

தெய்வம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் என கருப்பொருள் பதினான்கு வகைப்படும்.

### உரிப்பொருள் :

உரிப்பொருள் என்பது உயர்மக்களுக்குரிய ஒழுக்கங் களாகும். புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்னும் ஐந்தும் உரிப்பொருள்களாகும்.

> "போக்கெல்லாம் பாலை புணர்தல் நறுங்குறிஞ்சி
> ஆக்கஞ்சே ரூடல் அணி மருதம் - நோக்குங்கால்
> இல்லிருத்தல் முல்லை இரங்கல் நறுநெய்தல்
> சொல்லிருந்த நூலின் றொகை"

என்னும் பழம் செய்யுளால் ஐந்திணைக்குரிய உரிப்பொருளை அறிய முடிகிறது.

குறிஞ்சி : புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
(இன்பம் நுகர்தல்)

முல்லை : இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
(பிரிவுத் துன்பம் பொறுத்தல்)

மருதம் : ஊடலும் ஊடல் நிமித்தமும்
(பரத்தையால் ஊடல் கொள்ளுதல்)

நெய்தல் : இரங்கலும் இரங்கல் நிமித்தமும்
(பிரிவால் வருந்துதல்)

பாலை : பிரிதலும் பிரிதல் நிமித்தமும் (பொருள் தேடல்)

## அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்றல் என்பது அறத்திற்கு மாறுபடாத முறையில் நிற்பதாகும். அறம் என்பது முறை தலைவி தோழிக்கும் தோழி செவிலிக்கும் செவிலி நற்றாய்க்கும் என முறையே களவினை வெளிப்படுத்தி நிற்பது அறத்தொடு நிற்றல் எனப்படும்.

அலர் எழுந்ததும் தலைவியின் நிலையை வீட்டில் உள்ளோர் அறிய முற்படுவர். தலைவனும் மணம் பேசச் சான்றோரை அனுப்புவான். இந்நிலையில் தலைவியின் களவொழுக்கம் தலைவியால் தோழிக்கும் தோழியால் செவிலிக்கும் செவிலியால் நற்றாய்க்கும் நற்றாயால் தந்தை தனையருக்கும் அறிவிக்கப்படும் இதுவே அறத்தொடு நிலையாகும்.

## உடன்போக்கு

அறத்தொடு நிலையாலும் மணமுடிவு ஏற்படாத நிலையில் தலைவி தலைவனுடன் அவன் ஊருக்கே புறப்பட்டுப் போவாள். இது உடன்போக்கு எனப்படும்.

CPA College

**வரைவு கடாதல் :**

பகல்குறியிலும் இரவுக்குறியிலும் தலைவன் தலைவியைக் கூடிச் செல்லும் களவு வெளிப்படும்போது ஊரார் அலர்க்கு அஞ்சிய சுற்றத்தார் வெளியில் சென்று வராமல் தலைவியை வீட்டுக்காவலில் வைத்திடுவர். இருள் நிறைந்த இரவு நேரங்களில் கொடிய விலங்குகளும் பாம்பு முதலிய நச்சு உயிர்களும் உள்ள அரிய வழியில் தலைவன் வருவதால் அவனுக்கு ஏதாவது இடையூறு நேரக்கூடும் என்று தோழி அச்சம் அடைகின்றாள்.

இக்களவொழுக்கம் நமது குடிப்பிறப்புக்கும் பெருமைக்கும் ஏற்றது அன்று. இனி நீவிர் இவளை மணந்து கொள்வதே தகுதியாகும் என்று தலைவனிடம் தோழி கூறுவாள். இவ்வாறு கூறுவது வரைவுகடாவுதல் எனப்படும். வரைவு என்பது மணம் கடாதல் என்பது வினாதல் எனப் பொருள்படும். மணந்து கொள்ளுதலைப் பற்றி தலைவனிடம் கேட்டல் வரைவுகடாதல் ஆகும்.

CPA College